www.tamilarangam.net

S-9

# நயவஞ்சகக் கொலை காரர்களான 'புளொட்' இயக்கம் பற்றி முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கு ஓர் எச்சரிக்கை!

'புளொட்' (PLOT) இயக்கம் மீண்டும் தன் கொலைகார நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் ஐயா உட்பட ஏழு தோழர்கள், உமாமகேஸ்வரன் தலைமையிலான 'புளொட்' இயக்கத்தினரால் வன்னிப் பிரதேசத்தில் கடத்தப்பட்டு, குரூரத்தனமாகச் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

29-04-88 அன்று வவுனியாவிலிருந்து மன்னாருக்குச் சென்று கொண்டிருந்த தோழர் ஐயாவையும் உடன் சென்ற தோழர் பாபுவையும் இசைமாலைத்தாழ்வு எனுமிடத்தில் வைத்தும், சாரங்கன், தங்கேஸ், ரவி, பபா உட்பட மேலும் ஐந்து தோழர்களை முருங்கனில் வைத்தும் கடத்திச் சென்று சித்திரவதை செய்து கொன்றுள்ளனர்.

வன்னிப் பிராந்தியத்தில் தமது வஞ்ச வரிவசூல்களாலும் அடாவடித்தனங்களாலும் இழிந்த பெயரைச் சம்பாதித்துக் கொண்ட 'புளொட்' கும்பல், அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகத் தனது வேலைகளை விஸ்தரித்துக் கொண்ட ஈ. பி. ஆர். எல். எப். மீதான தமது பொறாமை வஞ்சத்தனத்தை வெளிக்காட்டுவதாகவே இத் துரோகக் கொலைகளைச் செய்து முடித்திருக்கிறது.

நண்பர்கள் போல் வேஷமிட்டிருந்து நயவஞ்சகமாய் முதுகில் குத்திவிட்ட புளொட்' கும்பலின் பச்சை ரத்த வெறிபிடித்த இந்தக் கொலைகளுக்கான நோக்கம் சந்தேகத்திற்கிடமில்லாதது. அது, தனது இயக்கத்தினுள் தங்கள் தலைமைகளை நிலைநிறுத்திக் கொள்ளக் கையாண்ட அதே கொலைகாரப் பாணியில், ஏனைய இயக்கங்களை அயுகரீதியாக அழித்து, தன்னை மட்டுமே—குறைந்தபட்சம் வன்னிப்பிராந்தியத்தையாவது அடக்கியாளும் ஒரே இயக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்கிற கீழ்த்தரமான வெறியே தவிர வேறல்ல.

புலிகள் ஏனைய இயக்கங்களை அழித்து, தன்னை நிலைநிறுத்த முற்பட்டதவும், இதவும் அளவு ரீதியாக வித்தியாசப்படலாமே தவிர, குணம்சரீதியில் ஒரே வகைப்பட்டவை தான். புலிகள் அளவுக்கு இவர்களால் செய்ய இயலாமற் போனதன் காரணம், இவர்களின் ஆயுசப் பலவீனமே தவிர, வேறெந்த நல்ல எண்ணமோ கொள்கையோ அல்ல. இக்கும்பலின் கொலைப் பாரம்பரியம் ஈழதேச மக்களுக்கு நன்கு தெரிந்திருந்த போதும், சிங்கள மக்களுக்கும் உலகுக்கும் ஓரளவு தான் தெரியும்.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலத்திலேயே வெறும் கருத்து வேற்றுமைக்காக இறைகுமாரன் உமைகுமாரன் சகோதரர்களை வீடுகளிலிருந்து அழைத்து வந்து வீதியில் சுட்டு எறிந்து விட்டுப்போன இவர்கள், அந்தக் கொலைகளுக்கும் இன்று வரை உரிமை கோரவேயில்லை. ஆனால், அது இன்று எல்லோருக்கும் தெரிந்த உண்மை

மேலும் இயக்க மோதல்கள் உருவாகாத காலத்திலேயே கழிபரத்தில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆறு இளைஞர்களைக் கொன்று கடற்கரை மணலில் புதைத்தார்கள். அவர்கள் மறைக்க முயன்ற பிரதேசங்கள் கண்டெடுக்கப்படுவதற்குக் காரணமாயிருந்ததாகக் கூறி, எமது தோழர் துரைசிங்கத்தையும் கடத்திச் சென்று கோயிலொன்றில் வைத்துச் சித்திரவதைகள் செய்து கொன்று புதைத்தார்கள்.

கர்ப்பிணிப் பெண்ணொருத்தி உட்பட ஒன்பது இளம் பெண்களை—இன்னும் யாருக்கும் தெரியாத காரணங்களுக்காக—கொலை செய்து யாழ்ப்பாணம் மணியந்தோட்டத்தில் புதைத்தார்கள். இச்சடலங்கள் சிதைந்த நிலையில் பின்னர் மீட்கப்பட்டன.

புளொட் இயக்கத்தினரின் இது போன்ற செயற்பாடுகளால் ஏற்பட்ட உட்கட்சிப் பிரச்சினைகளின் மூலம் இவர்களது இது போன்ற பல்வேறு உண்மைகளும் வெளிவந்தன.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாவற்றையும் விட இவர்களின் வெளிப்பூச்சுப் பேச்சினால் கவரப்பட்டு, விடுதலைப் போராட்டத்திற்குத் தம்மை அர்ப்பணித்துப் புறப்பட்ட புளொட் இயக்கப் போராளிகள், இவ்வாறான புளொட்டின் போக்கிற்கு எதிராகக் கேள்வியெழுப்பிய காரணத்திற்காக, குரூரத்தனமாகக் கொன்று தமிழ் நாட்டின் சவுக்கந் தோப்புகளினுள் புதைக்கப்பட்டனர். சந்ததியார் சிவநேசன் போன்ற போராளிகளும் இக் காலத்தில்தான் நயவஞ்சகத் தனமாகக் கொன்று மறைக்கப்பட்டனர்.

ஒப்பந்தத்தின் பின்னரும் வவுனியா சென்ற ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஆதவன், இவர்களால் கொலை செய்யப்பட்டார்.

இது போன்ற எண்ணிலடங்காத காட்டு மிராண்டித்தனக் கொலைகளை மேற்கொண்டதனாலேயே புளொட் இயக்கத்தை, அவ்வியக்கத்தின் ஆயிரக்கணக்கான போராளிகளும் பொது மக்களும் நிராகரித்தனர்.

சகல விடுதலை இயக்கங்களும் ஈழவிடுதலைக்காய்த் தம்மாலியன்ற பங்களிப்பைச் செய்து கொண்டிருந்த வேளையில், புளொட் இயக்கத் தலைமையின் நயவஞ்சகத் தனத்தால், அவ்வியக்கப் போராளிகள் எதுவுமே செய்ய முடியாத விரக்திநிலைக்குத் தள்ளப்பட்டனர். பொது மக்களும், இப்போது திடீரென்று வந்து குதித்து நாட்டாண்மை செய்யும் இவர்களை வெறுப்போடு பார்க்கின்ற நிலைக்கும் இதுவே காரணம்.

நாம் முற்போக்கு ஜனநாயகசக்திகளுக்கு விடுக்கும் எச்சரிக்கை இது:

"இந்தக் கொலை காரர்க் குழு தனது கொலைத் தன உள்ளடக்கத்தை மறைத்து, வெளித்தோற்றத்திற்குப் பசுமை போர்த்தவர்களாக சமாதானம், ஜனநாயகம், சமூகப் புரட்சி என்ற சொற்களை உதிர்க்கிறது. தமிழ் மக்கள் மத்தியில் நன்றாக அம்பலப்பட்டுவிட்ட போதிலும், விபரம் தெரியாத சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு சக்திகளையும், சர்வதேச முற்போக்குச் சக்திகளையும் தனது பொய் அலங்கார வார்த்தைகளால் ஏமாற்றி நற்பெயர் சம்பாதிக்கும் நப்பாசையுடன் வளைய வருகிறது. இரத்த வாடையை முகர்ந்தபடி ஆட்டுத்தோலைப்போர்த்துக் கொண்டு, ஆட்டு மந்தைக்குள் நுழைந்து கொண்ட கபடத்தனமான நரி இது. வேட்டைப்பற்கள் துருத்தி நிற்கும் நரமாமிச போஷிணிகளுடன் சேர்த்துப் பார்க்கப்பட வேண்டிய இதை, நற்பிராணிகளுடன் சேர்த்து யாரும் தப்பாகக் கணித்துவிடக் கூடாது.

இவர்களின் வேஷதாரித்தனத்தையிட்டு எச்சரிக்கையாயிருங்கள், இவர்களைத் தனிமைப்படுத்துங்கள். ஏனெனில், இவர்களிடத்தில் முற்போக்கு, ஜனநாயக அம்சங்கள் சிறிதளவுக்குமில்லை; ஒரு நாட்டாண்மைக்காரனின் ஆதிக்கவெறியும், காடைத்தனமுமே உள்ளடங்கியுள்ளது

இவர்கள் புலிகளால் தடைசெய்யப்பட்டு வேட்டையாடப்பட்டபோது, நாம் பல புளொட் உறுப்பினர்களை உண்மையான மனிதாபிமானத்துடன் காப்பாற்றினோம்—பாதுகாத்தோம். வன்னிப்பிராந்தியத்தில் தோழர் ஐயா, இவர்களைப் பாதுகாக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், செய்த உதவிகளையும் இந்தக் கொலைக்காரப் புளொட்டும் எப்போது மறுக்க முற்பட்டாலும்—இலேசில் மறந்துவிட முடியாது. ஆனால், நன்றி கெட்ட, தனது ஆட்சியதிகார ஆசையை மட்டுமே குறியாகக் கொண்ட இந்த வஞ்சக புளொட் இயக்கத்தினர், தோழர் ஐயாவையே கொலை செய்துவிட்டு வெளிப்படையாய்க் காரணம் சொல்ல முடியாத இந்தத் துரோகத்தனத்திற்குச் சப்பைக்கட்டுக் கட்ட முயற்சிக்கின்றனர். மனச்சாட்சியுள்ள ஒன்றிரண்டு புளொட் உறுப்பினர்கள் இதற்கு என்ன பதில் தரப் போகிறார்கள்?

புளொட் தலைமையானது, இதைச் சமாளிக்க தனது உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் வழமை போல பொய்க் காரணங்களைக் காட்டி நியாயப்படுத்த முயலலாம்—அல்லது உரிமைகோராது விட்டுவிடலாம். ஏனெனில், கொலை வெறிக்கு, அதிகார - ஆதிக்க மோகத்திற்கு உண்மை தெரிவதில்லை உண்மை மனிதர்களையும் தெரிவதில்லை. ஆனால், காலம் எப்போதுமே உண்மையை ஒளித்து வைத்துக் கொண்டு விடுவதில்லை.

**—ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

---

இப்பிரசுரம் அ. வி. சே. ச. அச்சகத்தில் அச்சிட்டு அ. வ. அருண்மொழித் தேவன் அவர்களால் வெளியிடப்பட்டது. 4665/88

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்